ஊரின் வடகோடியில் அந்த மரம்
ஐந்து வயதில் பார்த்தபோதும்
இப்படியேதானிருந்தது
ஐம்பதைத் தாண்டி இன்றும்
அப்படியேதான்

தாத்தாவின் தாத்தா காலத்தில்
நட்டு வளர்த்த மரமாம்
அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன்

பச்சைக்காய்கள் நிறம் மாறிச்
செங்காய்த் தோற்றம் கொண்டதுமே
சிறுவர் மனங்களில் பரவசம் பொங்கும்

பளபளக்கும் பச்சை இலைகளுடே
கருநீலக் கோலிக்குண்டுகளாய்
நாவற்பழங்கள் கிளைகளில் தொங்கும்
பார்க்கும்போதே நாவில் நீரூறும்

காக்கை குருவி மைனா கிளிகள்
இன்னும் பெயரறியாப் பறவைகளுடன்
அணில்களும் காற்றும் உதிர்த்திடும்
சுட்ட பழங்கள் பொறுக்க
சிறுவர் கூட்டம் அலைமோதும்

வயதுவந்த அக்காக்களுக்காய்
கையில் பெட்டியுடன் ஓடிஓடிப்
பழம் பொறுக்கும் தங்கச்சிகள்

இரவில் மெல்லிய நிலவொளியில்
படையெடுத்து வரும்
பழந்தின்னி வௌவால் கூட்டம்

தோப்பு முழுக்கப் பரவிக்கிடக்கும்
மரத்தின் குளிர்ந்த நிழலிலே
கிளியாந்தட்டின் சுவாரசியம்
புளியமிளாறுடன் அப்பா வரும்வரை

நேற்று மதியம் நண்பர்களுடன்
என் மகன் விளையாடியதும்
அந்த மரத்தின் நிழலில்தானே

பெருவாழ்வு வாழ்ந்த மரம்
நேற்றிரவுப் பேய்க்காற்றில்
வேரோடு சாய்ந்துவிட்டதாமே
விடிந்தும் விடியாததுமாய்
துஷ்டி கேட்கும் பதற்றத்தில்
விரைந்து செல்கிறார் ஊர்மக்கள்
குஞ்சு குளுவான்களோடு

எனக்குப் போக மனமில்லை
என்றும் என்மன வெளியில்
அப்படியே நிற்கட்டும் அந்த மரம்
குன்றுகளின் நடுவே மாமலைபோல

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே ________
   அ) நிலா ஆ) மரங்கள்
   இ) பறவைகள் ஈ) விலங்குகள்
2. மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை ________
   அ) பூக்கள் ஆ) இலைகள்
   இ) மரங்கள் ஈ) வேர்கள்
3. மரங்களைப் பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் ________ கிடக்கின்றன.
   அ) குறைந்து ஆ) நிறைந்து
   இ) புதைந்து ஈ) அழிந்து
4. கால வெள்ளத்தில் மரங்கள் மறையலாம், அவற்றைப் பற்றிய ________ மறையாது.
   அ) நினைவுகள் ஆ) அழகுகள்
   இ) குறைகள் ஈ) நெருப்பு
5. ஊரின் வடகோடியில் நின்ற மரம் ________
   அ) புளியமரம் ஆ) மா மரம்
   இ) தென்னை மரம் ஈ) நாவல் மரம்
6. பச்சைக்காய்கள் நிறம் மாறிச் ________ தோற்றம் பெறும்.
   அ) கருங்காய் ஆ) செங்காய்
   இ) மஞ்சள் ஈ) வெள்ளை
7. பச்சை இலைகளுடே ________ கோலிக்குண்டுகளாய் நாவற்பழங்கள் கிளைகளில் தொங்கும்.
   அ) பச்சை ஆ) மஞ்சள்
   இ) கருநீலம் ஈ) சிவப்பு
8. அக்காளுக்காய் கையில் பெட்டியுடன் ஓடி ஓடிப் ________ பொறுக்கும் தங்கச்சிகள்.
   அ) பழம் ஆ) புளி இ) காய் ஈ) பூ
9. இரவில் மெல்லிய நிலவொளியில் படையெடுத்து வரும் ________ கூட்டம்.
   அ) கழுகு ஆ) வௌவால் இ) ஆந்தை ஈ) கிளி
10. பெருவாழ்வு வாழ்ந்த மரம் நேற்றிரவு ________ காற்றில் வேரோடு சாய்ந்து விட்டது.
    அ) தென்றல் ஆ) புயல் இ) பேய் ஈ) வாடை
11. 'நிலவொளி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
    அ) நில + வொளி ஆ) நிலா + ஒளி
    இ) நிலம் + ஒளி ஈ) நிலவு + ஒளி

12. 'கேட்டிருக்கிறேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) கேட்டு + இருக்கிறேன் ஆ) கேட்டி+ இருக்கிறேன்
இ) கேட் + டிருக்கிறேன் ஈ) கேட்டு + ருக்கிறேன்

13. 'நீரூறும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) நீ+ ஊறும் ஆ) நிரு + ஊறும்
இ) நீர் + ஊறும் ஈ) நீ + றூறும்

14. பழம் + தின்னி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) பழம்தின்னி ஆ) பழந்தின்னி
இ) பழத்தின்னி ஈ) பழத்துன்னி

15. பரவி + கிடக்கும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) பரவிக்கிடக்கும் ஆ) பரந்துகிடக்கும்
இ) பரவிக்கிடக்கும் ஈ) பரப்பிக்கிடக்கும்

9:51 PM

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ________

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

2. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுவை ________

அ) ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்
இ) வேக வைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள்

3. 'பெயரறியா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) பெயர + றியா ஆ) பெயர் + ரறியா
இ) பெயர் + அறியா ஈ) பெயர + அறியா

4. 'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) மன + மில்லை ஆ) மனமி + இல்லை
இ) மனம் + மில்லை ஈ) மனம் + இல்லை

5. நேற்று + இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ) நேற்றுஇரவு ஆ) நேற்றிரவு இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு

9:51 PM